THIRU K. M. SUBRAMANIAM: Two questions have been answered. I want to put a third question. I cannot press for an answer.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru K. M. Subramaniam can ask in person or consult the Hon. Minister and not try to create some precedents.

THIRU K. M. SUBRAMANIAM: I shall follow that advice in future. But in this case I have given notice under Rule 41 about uneven distribution of flood grants in the City of Madras to hut dwellers. I can put a question and answer may be given.

MR. DEPUTY SPEAKER: No.

### *(6) அறிக்கை அளித்தல்.*

### *(அ) சூப்பர் மார்க்கெட்டுகள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.*

THIRU PALANIVEL RAJAN: Sir, I rise to present the reports of the Estimates Committee on 'Supermarkets' and 'Hospitals and Dispensaries'.

### *(ஆ) 1969-70-க்கான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை*

THIRU MANALI C. KANDASAMI: Sir, I present the report of the Committee on Public Accounts on the accounts of the State of Tamil Nadu for the year 1969-70.

I also present the report on the statement of further action taken by the Government on the observations of the Committee contained in the Report on the purchase of about 400 grounds of vacant land comprised in R.S. No. 124/6 of Perambur Division (Erukkancheri) by the Tamil Nadu Electricity Board in 1963.

The second report is with me. It is under print. As soon as it is printed, it will be circulated to Members.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* சார், இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைச் சமர்ப்பிப்பதன் பேரிலே மேலும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1973 ஏப்ரல் 5] [திரு. கே. டி. கே தங்கமணி]

1969–70-ம் ஆண்டுக்கான ரிப்போர்ட்தான் இப்போது வந்திருக்கின்றது. 1970–71, 1971–72-ம் வருஷத்திற்கான பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்ஸ் இன்னும் கிடைத்தபாடில்லை. அடுத்த வருஷமாவது 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி' என்று வரும்போது இவை முழுவதுமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். 1973–74-ல் 1969–70-க்கான அறிக்கையை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகவே 'கரெண்ட் ரிப்போர்ட்' வருவதற்கு வழி செய்ய வேண்டும். வந்ததைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ஆரம்பத்திலேயே தீவிரமாக இருந்திருந்தால் இரண்டு ஆண்டு காலத்திற்குள் ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்து இருக்க முடியும். இப்படிப்பட்ட பழைய ரிப்போர்ட்டுகளை வைத்துக் கொண்டு பேசுவதில் இந்த சபைக்கு எந்தவிதத்தில் உபயோககரமாக இருக்க முடியும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சார், இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் ஓர் அங்கத்தினர் என்ற முறையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கமிட்டி ஆரம்பித்த சில மாதங்கள் வரையில், இது செயல்படுவதற்குக் கூட அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை. ஆகவேதான் இந்தக் கமிட்டி தன் வேலையைச் செய்ய முடியாமல் -வேலை செய்ய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தக் கமிட்டியின் தலைவரே இங்கே இருக்கின்றார். அவரே பெர்ஸனலாக எக்ஸ்ப்ளநேஷன் கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும் இல்லையா?

**திரு. மணலி சி. கந்தசாமி:** சார், இந்தக் கமிட்டி மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்ய விரும்பியபோதிலும் பல சந்தர்ப்பங்களிலே பதில்கள் தாமதமாக வந்ததால் கூட்டங்கள் தாமதப்பட்டன. இன்னும் கூட மூன்று இலாக்காக்களுடைய பிரச்சனைகள் சரிசெய்யப்படாமல் இருக்கின்றன. அடுத்த வருஷத்திற்கு விடப்பட்டு இருக்கின்றன என்று சொல்லித்

கொண்டு, வரும் காலத்தில் இந்தமாதிரி தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு இலாக்காக்கள் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வரும் கமிட்டிகள் இந்தக் கமிட்டித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தையும், திரு. தங்கமணி அவர்கள் கூறிய கருத்தையும் ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பார்கள் என்று நம்புகின்றேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த ரிப்போர்ட்ஸ் காலாகாலத்தில் வராததால் இதைப் பரிசீலிக்க முடியவில்லை என்ற கருத்து இருக்கின்றது. ஆகவே, அவை உடனடியாக மன்றத்தின் முன் வைக்கப்பட்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க இலாக்காக்களுக்கு 'டைரெக்ஷன்' கொடுக்க வேண்டும் என்றுதான் மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் நானும் இப்படிப்பட்ட கமிட்டியில் இருந்து இருக்கின்றேன். பொதுவாக கமிட்டிகளின் அறிக்கை என்று சொல்லும்போது இப்படித்தான் நடக்கின்றதே தவிர, ஏதோ இப்போதுதான் 1969–70-ம் ஆண்டுக்கான அறிக்கையைக் கொடுக்கின்றார்கள் என்று சொல்லுவதில் பலனில்லை. பொதுவாக எப்போதும் இப்படித்தான் நடைபெறுகின்றது. அவற்றிலும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரவர்கள் இருந்திருக்கின்றார்கள். இந்தக் கமிட்டியில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரவர்கள்தான் தலைமை ஏற்றிருக்கின்றார்கள். அந்தக் குறையை எடுத்துச் சொல்லுவதும் அந்தக் கட்சித் தலைவர்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இலாக்காக்களில் தாமதம் ஏற்படுகின்றது என்கின்றார். அதிகாரிகளைக் கேட்பதற்கு கமிட்டிக்கே வேண்டிய அதிகாரம் இருக்கின்றது. இதற்காக அமைச்சரவர்களிடம் போக வேண்டியதில்லை.